1981 ஜனவரி 23]

[முற்பகல் 10·30 மணி]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு ஏற்கனவே அனுமதித்துள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜவ்வாதுமலை பழங்குடி மக்களுக்குச் சிறப்புத் திட்டம்.

*வினா எண். 20—திரு. இல. பலராமன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) 1980–81-ல் வட ஆற்காடு ஜவ்வாது மலை பழங்குடி மக்களுக்கென சிறப்பு திட்டம் ஏதும் செயல் படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) திட்டங்களுக்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்டுள்ளன.

இதன் விவரம் :—

1. அரசு உண்டுறைவிடப் பள்ளி கள்.	இரண்டு
2. பட்டுப் பூச்சிகள் வளர்த் தலுக்காக	ஏறத்தாழ 80 ஏக்கர் நிலத்தில் ரூ, 5·00 இலட்சத்திலும்
3. குடிநீர் வசதிகளுக்காக	9 குடியிருப்பில் ஏறத்தாழ ரூ. 2·89 இலட்சத்திலும்
4. மின்வசதிக்காக	2 கிராமங்களுக்கு ரூ. 1·70 இலட்சம் செலவிலும்
5. வனவளத்திற்காக	ரூ. 6·05 இலட்சங்கள் செலவில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டல், சாலைகள் அமைத்தல் மற்றும் ஆசிரியர் குடியிருப்புகள் கட்டுதலுக்காகவும்.
6. நீர்பாசன வசதி	2 திட்டங்கள் ரூ. 1·25 இலட்சமும்.
7. கால்நடை அபிவிருத்திக்காக	ரூ. 1·55 இலட்சத்தில் கால்

நடை வழங்குதல் மற்றும் மருத்துவ மனை ஏற்படுத்துதல் போன்ற செலவுக்காகவும்.

8. வேளாண்மையை பொறுத்த வரையில்	ரூ. 2·33 இலட்சத்தில் விதைகள், செடிகள், மற்றும் விவசாயக் கருவிகள் வழங்குதலுக்காகவும்.
9. மண்வளப் பாதுகாப்பிற்காக	ரூ. 3·20 இலட்சங்கள் செலவிடவும் இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும்.

ஆக, 1980–81,ஆம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்டம், ஜவ்வாது மலை மற்றும் ஏலகிரி மலை வாழ் மக்களுக்கு, பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ. 25·47 இலட்சங்கள் செலவிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பதையும் இதைத் தவிர, இத்துணைத் திட்டப் பகுதிகளில், 30 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. ஜவ்வாது மலைப் பகுதிகளில் தேவைக்கேற்ப இக்காப்பகங்கள் சமூக நலத் துறையால் திறக்கப்படும்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் மத்திய அரசின் பங்கு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்? இதற்கென அமைக்கப்படும் குழுவில் சட்ட மன்ற உறுப்பினர்களும் இடம் பெறும் ஆலோசனை அரசிடம் இருக்கிறதா? இதுவரையில் இல்லை என்றாலும், இனிமேலாவது இது குறித்து அரசு ஆலோசிக்குமா? பெரிய திட்டமாக இருக்கின்ற காரணத்தினால், இது நல்ல முறையில் செயல்பட பொதுப் பணியில் இருக்கிற அங்கத்தினர்களையும் இதில் இணைப்பதற்கு அரசு ஆலோசனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980–81-ஆம் ஆண்டில் இந்த பழங்குடியினர் மேம்பாடு திட்டத்தின் கீழ் மொத்தமாக ரூ. 135·28 இலட்சங்கள் செலவிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ரூ. 25·47 லட்சத்தில், நான் கூறிய அந்தப் பணிகள் நடைபெறுவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் துணைக் கொண்டு ஏறத்தாழ 9 பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அந்த 9 பகுதிகளிலே ஒன்று

இந்த ஜவ்வாது மலைப் பகுதி என்பதை தெரிவித்துக்கொண்டு மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தையும் இந்த அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, 9 பகுதிகளில் இத்திட்டம் நடைபெறவிருக்கிறது, அதில் ஒன்று ஜவ்வாது மலைப்பகுதி என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் மக்கள் பிரதிநிதிகளாகிய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எந்த விவரமும் தெரிவிக்கப்படவில்லை. அவர்களுக்கு விவரம் தெரிந்தால் நல்ல பல யோசனைகளை அரசுக்கு சொல்ல முடியும். அதனால் இத்திட்டத்தில் மேற்கொள்ளும் மேல் நடவடிக்கைகள் குறித்து, அவைகள் செம்மையாக நடைபெற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் விவரங்களை அனுப்ப அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையில் வேளாண்மைத் துறைக்காகவும் செலவிடப்போவதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஜவ்வாது மலையில் வேளாண்மை காரியங்களுக்கு மின் இணைப்பே தரப்படவில்லை. ஆகையினால் இந்தச் சிறப்புத் திட்டத்தைப் பயன்படுத்தும்போது அங்குள்ள விவசாயிகளுக்கு மின், இணைப்புப் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான முயற்சிகளையும் அரசு எடுக்கும் என்று தெர்வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]